[9th August 1960

Banks up to 40 per cent of the value in the case of applications for loans for the discharge of prior debts and up to 50 per cent in the case of applications for loans for direct land improvements.

(c) Does not arise.

New libraries for North Arcot district

*** 44 Q.—Sri S. M. ANNAMALAI:** கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதில் அளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்ட மத்திய நூல் நிலையத்திலிருந்து எத்தனை நூல் நிலையங்களுக்கு அனுமதி கோரப்பட்டன?

(ஆ) எத்தனை நூல் நிலையங்களுக்கு சர்க்கார் அனுமதி தந்துள்ளனர்?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) Two.

(ஆ) Two.

Sri S. M. ANNAMALAI: ஸார், இப்போது கிராமங்களுக்கு அதிகமான அளவில் லைப்ரரிகள் தேவைப்படுவதால் இன்னும் அதிகமான லைப்ரரிகளை ஏற்படுத்துவதற்கு சர்க்கார் முன் வருமா?

The Hon. Sri C. SUBRAMANIAM: சர்க்கார் இதை நேரடியாக நடத்துவது இல்லை. "லைப்ரரி அத்தாரிட்டீஸ்" இருக்கிறார்கள்; அவர்கள் எங்கெங்கு லைப்ரரிகள் தேவைப்படுகின்றனவோ அங்கெல்லாம் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் வட ஆர்க்காடு ஜில்லாவைப் பொறுத்த வரையில் 19 கிளை நூல் நிலையங்கள் இது வரை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இன்னும் அதிகமாக ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்வார்கள் என்று நம்புகிறேன்.

Tanneries

*** 45 Q.—Sri V. K. KOTHANDARAMAN:** கனம் கைத் தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1957 முதல் 1959 வரை தோல் பதனிடும் தொழிலுக்கு சர்க்கார் கடன் உதவி எத்தனை பேருக்கு கொடுத்துள்ளார்கள்?

(ஆ) எந்த அடிப்படையில் கொடுக்கப்பட்டது?

THE HON. SRI R. VENKATARAMAN: (அ) 558 (five hundred and fifty-eight).

(ஆ) Loans are granted for the purchase of machinery or for construction of pits, working capital, etc.

Sri V. K. KOTHANDARAMAN: ஸார், நமது ராஜ்யத்தில் தோல் பதனிடும் தொழில் வட ஆர்க்காடு ஜில்லாவில் 90 சதவீதம் இருந்துக் கொண்டிருக்கிறது. ஆனால் அம்மாதிரிப்பட்ட இடங்களுக்கு இந்தத் தொழிலுக்காக "லோன்" கேட்கும் போது மறுக்கப்படுகிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா? இல்லையென்றால் இனிமேல் கொடுப்பதற்கு சர்க்கார் முன் வருமா?

9th August 1960]

THE HON. SRI R. VENKATARAMAN: இதில் 558 லோன்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னேன். எந்தெந்த ஜில்லாக்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் இப்போது என்னிடமில்லை. மொத்தம் கொடுக்கப்பட்டிருக்கும் தொகை சற்றேறக்குறைய 1,97,000 ரூபாய். 2,000 ரூபாய்க்கும் மேலுள்ள லோன்கள் 500-க்கும் மேல் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that compared to other small-scale industries, tanneries have been allotted a very small amount of rupees one lakh and odd and will the Government consider the desirability of raising the allotment for loans to a larger amount?

THE HON. SRI R. VENKATARAMAN : Allotments are not made on the basis of industries. Allotments are made on the basis of deserving cases. If the cases which are submitted to Government under the State Aid to Industries Act are deserving, then they will be considered.

Construction of houses under Slum Clearance Schemes

* 46 *Q*.—**SRI P. G. MANICKAM:** கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

சேரித் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டப்படுவதற்காக எந்தெந்த நகராட்சி மன்றங்களுக்கு எவ்வளவு தொகை, எத்தனை வீடுகள் கட்டப்படுவதற்காக, 1960-61-ம் வருடத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது?

THE HON. SRI R. VENKATARAMAN : A provision of Rs. 68 lakhs has been made in the current year's Budget for distribution to—

	(RS. IN LAKHS)
(1) Madras City Improvement Trust ...	24·00
(2) Corporation of Madras	35·00
(3) Muffasal Municipalities	9·00
Total ...	68·00

SRI P. G. MANICKAM : எத்தனை முனிசிபாலிட்டிகளுக்கு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது? அதன் பேரில் எத்தனை வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன?

THE HON. SRI R. VENKATARAMAN: நான்கு முனிசிபாலிட்டிகளுக்கு கொடுக்கப் பட்டிருக்கின்றன—

		ரூபாய்
திருநெல்வேலி	..	4,20,000
சேலம்	..	5,26,000
திண்டுக்கல்	..	2,03,000
திருச்சிராப்பள்ளி	..	2,32,000